அமர்வு வழக்கு எண்.135/2020 அ.சா.8 ஸ்ரீதேவி க/பெ.ஜெயபால் நாள் 07.12.2021

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி (பிற்பகல் 3.40 - 4.16 )

நான் சிறுவாலை கிராமத்தில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக இருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என் பக்கத்து வீடு. சாட்சிகள் நதியா வீடு என் எதிர் வீடு. 1வது எதிரியும், நதியாவும் காதலித்து வந்தார்கள். அவர்கள் திருமணம் செய்துகொள்ளப்போவதாக பேசிவந்தார்கள். அதன்பிறகு அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று தெரியவில்லை. 1வது எதிரி பாலாஜி வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார். நதியாவுக்கு தற்போது 2 வாரத்திற்கு முன்பு வேறு ஒருநபருடன் திருமணம் நடந்தது. 3 வருடத்திற்கு முன்பு பெண் கேட்க போனார்கள். எதிரி குடும்பத்தினர் திருமணம் பேச வந்திருக்கிறார்கள் என்று நதியாவின் அம்மா என்னை அழைத்தார். நான் போவதற்குள் கைதாம்பூலம் மாற்றிக்கொண்டதாக சொன்னார்கள். போய் பார்த்துவிட்டு நான் டீ வைத்து கொடுத்தேன். அதற்குள் என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவரவர் வேறு திருமணம் செய்துகொண்டார்கள். போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிவழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில், கடந்த 20.2.2016ம் தேதி 1வது எதிரி பாலாஜியின் அம்மா தேவராஜூம், அம்மா குப்புவும் ஞானசேகர் வீட்டிற்கு வந்து நதியாவை பெண்கேட்டார்கள் என்றும், அதற்கு ஞானசேகர் தன் மூத்த மகளுக்கு திருமணம் செய்தபிறகு தான் நதியா திருமணம் பற்றி பேசலாம் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அதற்கு அவர்கள் இப்போது கைதாம்பலம் மாற்றிக்கொள்ளலாம் என்று கூறி கைதாம்பூலம் மாற்றிவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள் என்றும், கைதாம்பலம் மாற்றியதால், பாலாஜி, ஞானசேகரும், அவர்மனைவியும் இல்லாத நேரம் பார்த்து வீட்டிற்கு வந்து நதியாவிடம் நமக்கு தான் கைதாம்பூலம் மாற்றிவிட்டார்களே நான் தான் உன்னை கல்யாணம் செய்துகொள்ளப்போகிறேன் என்று ஆசை வார்த்தை கூறி உடலுறவு கொண்டதாகவும், இந்த நிலையில் கடந்த 8.7.2017ம் தேதி ஞானசேகரின் மூத்த மகளுக்கு திருமணம் முடிந்தது என்றும், ஞானசேகர் மகள் நதியா தான் பாலாஜியிடம் கல்யாணத்தை பற்றி பேசியபோது, தான் லாரி வாங்கியது 5 லட்சம் கடன் இருக்கிறது என்றும், அதை அடைத்துவிட்டுதான் கல்யாணம் செய்துகொள்வேன் என்று சொன்னார் என்றும், 20.7.2018ம் தேதி காலை 10 மணிக்கு உன் அக்கா கல்யாணம் தான் முடிந்துவிட்டது, என்னை

கல்யாணம் செய்துகொள் என்று கேட்டதற்கு உன்னை கல்யாணம் செய்துகொள்ள முடியாது,உன் அப்பாவிடம் சொல்லி வேறு யாரையாவது கல்யாணம் செய்துகொள் என்று கூறியதாகவும், உடனே நதியா பாலாஜியின் வீட்டிற்கு சென்று பாலாஜியின்அப்பா, அம்மா மற்றும் பாலாஜியின் சித்தப்பா ஆறுமுகத்திடமும் பாலாஜி என்னை கல்யாணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்கிறார் என்று சொன்னதற்கு பாலாஜி வீட்டிற்கு வரட்டும், கல்யாணம் செய்துவைக்கிறோம் என்றும், என்னைக்கா இருந்தாலும் நீ தான் எங்கள் வீட்டு மருமகள் என்று சொல்லி நதியாவை சமாதானப்படுத்தி அனுப்பினார்கள் என்றும், நதியாவை, பாலாஜியின் அப்பா, அம்மா, அவர் சித்தப்பா ஆறுமுகம் ஆகியோர் நதியாவை திட்டவோ மிரட்டவோ இல்லை, சம்பவத்தை எங்கள் ஊரைச்சேர்ந்த பிச்சைக்காரன் மகன் வீரமுத்து, மகாதேவி, சாந்தகுமாரி, ஏழுமலை, கோமலிங்கம் ஆகியோர் நேரில்பார்த்தோம் என்றும், பாலாஜியும், நதியாவும் பழகியது எங்களுக்கு தெரியும் என்றும், பாலாஜி நதியாவை கல்யாணம் பண்ணிக்க விருப்பமில்லை என்று சொன்னதால் நதியா காவல்நிலையத்தில் பாலாஜி மீது புகார் கொடுத்தார் என்றும், புகாரின்பேரில் விசாரணை செயதார்கள் என்று போலீசிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது உண்மைகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை</u>

ஆஜர் எதிரிகள் வீடும், என் வீடும் பக்கத்துபக்கத்து வீடு என்றால் சரிதான். பொதுவாக எதிரிகள் வீட்டில் எது நடந்தாலும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 நதியா எனக்கு பங்காளி வீட்டுப்பெண் என்றால் சரிதான். மழை பெய்தால் மழை தண்ணீர் சம்மந்தமாக எங்களுக்கும், ஆஜர் எதிரிகள் வீட்டிற்கும் தகராறு வரும் என்றால் சரியல்ல. எதிரிகளுடன் எங்களுக்கு எந்த சண்டையும் இல்லை. 7 வருடத்திற்கு முன்பு எங்களுக்கும், எதரிகள் வீட்டிற்கும் முன்விரோதம் இருந்தது. போலீஸ் விசாரணையில் அனைத்தும் கூறவில்லை என்றாலும், அ.சா.1 எங்கள் பங்காளி வீட்டுப்பெண் என்பதாலும், அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் அவர்களுக்கு என்ன தகராறு என்ற விவரமும், எதனால் அவர்களுக்குள் கல்யாணம் நின்றுவிட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர்கள் இருவரும் பேசிவந்தது எனக்கு தெரியும். எதிரியின் அக்கா திருமணம் முடிந்தபிறகு கல்யாணம் செய்துகொள்கிறேன் என்று சொன்னது எனக்கு தெரியும். அதற்குள் என்ன தகராறு வந்தது என்று எனக்கு தெரியாது. அ.சா.1க்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை என் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரிக்கும்போது வீட்டில் கையெழுத்து போட்டேன். போலீசார் விசாரிக்கும்போது நதியாவின் உறவினர்களும் உடனிருந்தார்களா என்றால் இல்லை. போலீசார் விசாரிக்கும்போது ஊர்க்காரர்கள் இருந்தார்கள். எனக்கு திருமணம் ஆகி 8 வருடமாகிறது. நான் அதே ஊரைச்சேர்ந்தவரை திருமணம் செய்துகொண்டேன்

என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் என் கணவருக்க உறவினரா என்றால் இல்லை. அ.சா.1 என்ன படித்திருக்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. சுமார் 10வது வரை படித்திருக்கலாம். அ.சா.1 சிறுவாலையிலும், அதன்பிறகு கெடாரிலும் படித்தார். அவர்கள் இருவரும் பழகுவது 10 வருடமாகவே தெரியும். அ.சா.1 எனக்கு எதிர் வீடு என்பதாலும், ஆஜர் எதிரிகள் பக்கத்து வீடு என்பதாலும், எங்களுக்குள் எறுகனவே முன்விரோதம் இருந்தது என்பதாலும், அ.சா.1 எனக்கு பங்காளி உறவு என்பதாலும், அ.சா.1 கேட்டுக்காண்டதற்கிணங்க அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொல்வது சரியல்ல.

# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.135-2020

Deposition of witness No. for Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : திரு.பாலு | அ.சா.11 LW.11 |
| Father's Name | : குழந்தைவேல் | |
| Village | : கெடார் கிராமம் | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : 52 | |
| Time | : 4.16 pm – 4.23 pm | |

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 07th day December 2021.
07.12.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். வழக்கமாக நானும், எனது நண்பர் குமரவேலும் ஏரிக்கரைக்குபோவோம். ஏரிக்கரைக்கு போனபோது கெடார் காவல்நிலையத்தில் நிறைய பேர் இருந்தார்கள். அதில் எனக்கு தெரிந்த நபர் ஒருவர் இருந்தார். ஏதோ பிரச்சனையா என்று போய் பார்த்தேன். கெடார் காவலநிலயத்தில் ஒரு கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து போட்டேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் குமரவேல் என்பவரும் கையெழுத்து போட்டார். எனக்கு விவரம் தெரியாததால் நான் கையெழுத்து போட்டுவிட்டேன். போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய

<u>அனுமதி கோரி அனுமதிவழங்கப்பட்டது.</u>
<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், அந்த விசாரணையில், நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த காசிநாதன் மகன் குமரவேல் என்பவரும் கெடார் பஸ்நிறுத்தம் அருகில் நின்றுகொண்டிருந்தபோது கஞ்சனூர் காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் எதிரி பாலாஜியை கைது செய்து, எதிரியை விசாரித்தனர் என்றும், அவர் எந்த துன்புறுத்தலும், அச்சுறுத்தலும், தூண்டுதலுமின்றி எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றாலும், அதில் நானும், குமரவேலும் சாட்சிக்கையெழுத்து போட்டோம் என்றாலும், தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.